**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.109/16** **நாள்.28.01.2020**

2020-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர் செல்வம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | தாமோதரன் | சாதி | |
| கிராமம் | | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 52 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து பச்சையம்மாளிடம் கிரையம் வாங்கியது என்றால் சரிதான். பச்சையம்மாள் ஏலம் அடிப்படையில் நீதிமன்றத்தில் கிரையம் பெற்றார். 13.04.1987ம் தேதியில் ஏலம் எடுத்தார். பச்சையம்மாள் ஏலம் எடுத்து நான் கிரையம் பெறுவரை சொத்தினை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 13.04.1987ம் தேதியில் ஏலம் உறுதி செய்யப்பட்டது. பச்சையம்மாள் நீதிமன்றம் மூலம் ஒப்புதல் வாங்கினாரா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. ஒப்புதல் வாங்கி ஒருவருட காலத்திற்குள் உடைமைக்கு மனு தாக்கல் செய்யதாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெறும்முன் சொத்தின் வில்லங்கம் குறித்து சான்று எதுவும் எடுத்து பார்க்கவில்லை. என் அப்பா கடன் வாங்கியதற்காக சொத்து ஏலத்திற்கு வந்து விட்டது. ஏலத்திற்கு வந்த நபரிடம் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். ஏலத்தில் போன சொத்து என் அப்பாவின் பரம்பரை சொத்து. ஏலம் எடுத்த பச்சையம்மாள் பெயரில் சொத்து பட்டா சிட்டா மாறியதா என்று நான் பார்க்கவில்லை. சொத்துக்கு பக்கத்தில் உள்ளவர்களை சொத்து யாருக்கு சொந்தமானது யார் அனுபவித்து வருகிறார்கள் என விசாரித்து வாங்கவில்லை. ஏலம் எடுத்து 10 அல்லது 15 வருடம் பச்சையம்மாள் சொத்தை அனுபவித்து வந்தார். நான் கிரையம் வாங்கும் முன்பு ருக்குமணி அம்மாள் வழக்கு சொத்தை கிரையம்பெற்றார் என்றால், அது பற்றி எனக்கு முதலில் தெரியாது. 2016ல் வருடம் நிலத்தை பயிர் செய்ய சென்றபோது

எனக்கு தெரிய வந்தது. எங்கள் ஊரில் சொத்துகளை யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஏலம் எடுத்த பிறகு பட்டா மாறியதா, யார் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் தெரியாமல் நான் சொத்தினை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. பச்சையம்மாள் தான் கடன் கொடுத்திருந்தார். அவர் தான் ஏலம் எடுத்தார். எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். சின்னப்ப செட்டியாரிடம் தான் கடன் வாங்கினார் என்றால், சரிதான். பச்சையம்மாளின் கணவர் தான் சின்னப்ப செட்டியார். குடும்பத்தோடு சேர்ந்து சின்னப்ப செட்டியார் குடும்பத்தோடு சேர்ந்து சூதுமார்க்கமாக பெற்ற கிரையம் செல்லத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. நான் 15 1/4 சென்ட் பச்சையம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கினேன். 15 1/4 சென்ட்க்கு ஐக்குபந்தி காட்டி கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். 77 சென்ட்டை 5 பேர் சேர்ந்து ஐக்குபந்தி காட்டி கிரையம் வாங்கியுள்ளோம். மற்ற 4பேரும் ஐக்குபந்தி காட்டி தான் கிரையம் பெற்றுள்ளார்களா என்றால், அவ்வாறு தான் கிரையம் பெற்றுள்ளார்கள். ஐக்குபந்தி காட்டி கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. 77 சென்ட் தான் சொந்தம் என பரிகாரம் கேட்டுள்ளது, தனிதனியாக 15 1/4 சென்ட் சொந்தம் என பரிகாரம் கேட்காதது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1998ல் நான் கிரையம் பெற்றேன். 1998ம் வருடத்திலிருந்து வழக்கு தாக்கல் செய்த 2016ம் வருடம்வரை நான் செலுத்திய வரி ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்யவில்லை. வீட்டில் வைத்துள்ளேன். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். காலங்கடந்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு காலதோஷத்தால் பாதிக்கபட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சொத்து எங்களுக்கு சொந்தமானது என நான் விளம்புகை கேட்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. 3 அல்லது 12 வருடத்திற்குள் பிரதிவாதி கிரையம் பெற்றதை செல்லத்தக்கது அல்ல என பரிகாரம் கேட்காததால் என் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் கொடுத்துள்ளார், பிரதிவாதி அனுபவித்து வருகிறார், என்றாலும், இவ்வளவு நான் கழித்து கூட்டு சதி செய்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. பச்சைம்மாளுக்கு உரிமை இல்லாத சொத்தை கிரையம் வாங்கி வந்து எங்களுக்கு தான்

சொந்தம் என உரிமை கொண்டாடுவது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. வீணான வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை நஷ்டபடுத்துவதால் நான் அவர்களுக்கு செலவு தொகை கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.